தேர்ந்தெடுக்கப் பள்ளிக் கல்வி இயக்குநரின்கீழ் ஒரு குழு அமைக்கப்பட்டது. கல்லூரிகளில் பயன்படுத்தற்குரிய பாட நூல்கள் எவை எவை என்பதை முடிவு செய்வது பல்கலைக் கழகங்களே ஆகும்.

திரு. எஸ். சங்குமுத்து தேவர் : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டில் பள்ளிகளில் அரசினுல் வெளியிடப்படக்கூடிய பாடப் புத்தகங்கள் சரியாகக் கிடைக்கவில்லை. அதன்காரணமாகப் பள்ளிக் குழந்தைகள் கல்வி கற்பதற்காக மிகவும் கஷ்டப்பட்டார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டில் முடிவு எடுத்து, பாடப் புத்தகங்களை அச்சிடுவதில் சிறிது காலதாமதம் ஏற்பட்டதன் காரணமாக பாட புத்தகங்களை அச்சிடுவதில் சிறிது காலதாமதம் ஏற்பட்டதன் காரணமாகப் பாடப் புத்தகங்கள் வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டது. இந்த ஆண்டு மே திங்களுக்குள் எல்லாப் பாட நூல்களையும் அச்சிட்டுக் கொண்டுவந்து முன்கூட்டியே எல்லா மையங்களுக்கும் அனுப்பப் பட்டு, மாணவர்கள் எளிதாகப் பெறுவதற்கு வழிகள் செய்யப் பட்டிருக்கின்றன.

திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பாடப்புத்தகக் குழு இனிமேலாவது புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுடைய புதுமைக்கவிதைகளையும், பேரறிஞர் அண்ணு அவர்களின் சீர்திருத்தக் கட்டுரைகளையும் பாடப் புத்தகத்தில் சேர்க்க வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கும், உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கும் துணைக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. இந்தக் கேள்வி பாட நூல்களைப் பள்ளிகளில் வைப்பது பற்றி. பாட நூல்களில் என்ன என்ன சேர்ப்பது என்பது பாடநூல் ஆசிரியர்கள் கவனிக்க வேண்டிய ஒன்று. வரலாற்றுச் சிறப்பு பெற்றவர்கள் இம்மாதிரி தலைவர்களின் வரலாற்றுக் குறிப்புக்களையெல்லாம் பாடநூல்களில் சேர்க் கிருர்கள். உறுப்பினர் அவர்கள் கூறுகிற கருத்துக்களைச் சேர்ப்பதில் தடை ஒன்றும் இல்லை. அறிஞர் அண்ணுவைப்பற்றிய தனி நூல் நான்-டீடெயிலாகவும் வைக்கப்பட்டிருக்கிறது. ஆசிரியர்கள் நூல்கள் எழுதுகிருர்கள். அதை டெக்ஸ்ட் புக் கமிட்டி அப்ரூவ் செய்கிருர்கள். அப்படி நூல்கள் தேர்ந்தெடுக்கப்படு வதற்குத்தான் இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

பள்ளிப்பாட நூல்கள் வெளியீடு

*299. வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

அடுத்த 1972–73-ம் கல்வி ஆண்டில் அரசு வெளியிடவிருக்கும், பள்ளிக்கூடப் புத்தகங்கள் பற்றி புத்தக வியாபாரிகளுக்கு முன் அறிவிப்பு கொடுக்கப்பட்டுவிட்டதா?

1971 ஜூலை 20]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அடுத்த ஆண்டுக்கு தமிழ்நாடு பாடபுத்தக நிறுவனம் என்னென்ன புத்தகங்கள் வெளியிடவேண்டும் என்பது அரசின் பரிசீலனையில் உள்ளது. இது பற்றி விரைவில் முடிவு எடுக்கப்பட்டு அறிவிக்கப்படும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தனியார்களுக்கு வாய்ப்பினை அளிக்காமல், எல்லாப் பாட நூல்களையும் அரசாங்கமே வெளியிட ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்தக் கொள்கையின் அடிப்படையில்தான் எல்லாப் பாடப் புத்தகங்களையும் வெளியிடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. 1 முதல் 10 வகுப்புகள் வரை தமிழ் பாட நூல்கள் வெளியிடப்படுகின்றன. நான்காம் வகுப்பிலிருந்து 10-ம் வகுப்புகள் வரை ஆங்கில பாடபுத்தகங்கள் ஆழ்ந்த படிப்புக்காக வெளியிடப்படுகிறது. 3-வது வகுப்பு முதல் 11-வது வகுப்பு வரை கணக்கு நூல் வெளியிடப்படுகிறது. வேறு அறிவியல், புவியியல் 11-ம் வகுப்புக்கு வெளியிடப்படுகிறது. வேறு எந்தெந்த நிலைகளில் எந்தெந்த நூல்களை வெளியிடுவதற்கு எடுத்துக் கொள்ளலாம் என்பதை யோசித்துக்கொண்டிருக்கிறோம். எந்தெந்த நூல்களை அச்சிடலாம் என்பதை ஆராய்ந்து வருகிறோம். அதற்கான குழு விரைவில் கூடி முடிவு எடுக்கும். அதன்பிறகுதான் இந்த ஆண்டில் எந்தெந்த நூல்கள் அச்சிட்டு வெளியிட எடுத்துக் கொள்ளப்படும் என்பதை அறிய முடியும்.

கோவை நகராட்சியில் பணிபுரியும் தற்காலிகத் தொழிலாளர்கள்

* 300. **வினா—திரு. என். மருதாசலம் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை நகராட்சி மன்றத்தில் குடிநீர் விநியோகம், மின்சார விநியோகம், ரோடு பராமரிப்பு ஆகிய பிரிவுகளில் ஐந்து முதல் பத்தாண்டுகள் வரை என்.எம்.ஆர். கூலிகளாக வேலை செய்பவர்களை நிரந்தர பணியாளர்களாக்க அரசுக்கு உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆம். இது கோயம் புத்தூர் நகராட்சியின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். மருதாசலம் : தலைவர் அவர்களே, கோவை நகராட்சியிலே தண்ணீர் இலாகா மின்சார இலாகா மற்றும் ரோடு பராமரிப்பு இவற்றில் உள்ள தொழிலாளர்கள் 5, 10 வருடங்களாக நிரந்தரக் கூலியாக இல்லாமல் டெம்பரரியாக வேலைசெய்கிறார்கள். அவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்று கோவை நகர சபைக்கு அரசாங்கம் உத்திரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பொறியல் போன்ற துறைகளில் தற்காலிகமாகப் பணி புரிந்து வருகிறார்கள். அப்படிப் பட்டவர்கள் 314 பேர்கள் பணிபுரிந்துவருகிறார்கள். அவர்களிலே